அசல் வழக்கு எண் : 49/2023

நாள் : 20.08.2025

வா.சா. : 1

பெயர் : பாத்திமா நாச்சியா

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் கணவர் வெளிநாட்டில் இருப்பதால் சாட்சியமளிக்க வரவில்லை. என் கணவர் 2018 முதல் வெளிநாட்டில் உள்ளார். கடந்த 7 ஆண்டுகளாக இந்தியாவிற்கு வரவில்லை. எனக்கு இந்த வழக்கில் சாட்சியமளிக்க மட்டும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது ஆனால் வழக்கு தாக்கல் செய்ய அதிகாரம் வழங்கவில்லை. மாங்கனாம்பட்டு பள்ளிவாசல் கட்டுவதற்கு எவ்வளவு ரூபாய்கு ஒப்பந்தம் பேசப்பட்டது எவ்வளவு செலவானது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. பள்ளிவாசல் கட்டுவதற்காக பிரகாஷ் இரும்பு கடையில் வாங்கப்பட்ட பொருட்களுக்கு தொகையை கொடுக்கமுடியாததால் கால அவகாசம் கொடுத்தும் பணம் தராததால் சொத்தை கிரயம் சாசனம் செய்து கொடுத்தோம். பிரகாஷ் இரும்பு கடை உரிமையாளரிடம் தான் எங்களுக்கு பிரச்சனை. பொருட்களை வாங்கியது அவரிடம் தான். அவரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. பிரகாஷ்இரும்பு கடை அவர் அண்ணன் தம்பிகள், தம்பி மகன்கள் எல்லோரும் சேர்ந்து நடத்தும் கடை. பிரகாஷ் கடை இரும்பு கடையில் பொருட்கள் வாங்கியதற்கு ரசீதுகள் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த ரசீதுகள் யாரிடமுள்ளது என்றால் என்னிடமில்லை. பிரகாஷ் இரும்பு கடையில் பாக்கியுள்ளது தொடர்பாக அறிவிப்போ வழக்கோ எதுவும் தாக்கல் செய்யவில்லை. சரவணன் பெயரில் மட்டும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரகாஷ் இரும்பு கடை மேனேஜர் சரவணன் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். சரவணன் மேனேஜராக வேலை செய்தார்

Fathima Nachiya 20/8/25

என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பிரகாஷ் எங்களிடம் சரவணன் என் தம்பி மகன் அவர் மேனேஜர் என்றும் சொன்னதால் அவன் பெயரில் கிரயம் செய்து கொடுத்தோம். எங்களுக்கும் பிரகாஷ் இரும்பு கடைக்கும் நேரடியாக எந்த ஒப்பந்தமும் இல்லை. அதேபோல் எங்களுக்கும் சரவணனுக்கு எந்த நேரடி ஒப்பந்தமும் கிடையாது. பிரகாஷ் இரும்பு கடையில் பொருட்கள் வாங்கியதற்கு ஆதாரம் என்னிடமில்லை. சரவணனுக்கும் பிரகாஷ் இரும்பு கடைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் **என் கணவருக்கு அவரின் அம்மா ஹிபா செய்து வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் அது பிவாசாஆ 1** ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் என் கணவர் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் அசல்என்றால் சரிதான் அது **பிவாசா 2** ஆகும். பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட **பட்டா கணிப்பொறி நகல் பிவாசா 3** ஆகும். பிவாஆ 2ல் ரூ. 14,33,300/– பெற்றுக்கொண்டு கிரயம் செய்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் சாட்சி அதை நாங்கள் பெறவில்லை என்கிறார். பிவாசா 2 ஆவணத்தில் ஜமின் என்று சொல்லப்படவில்லை கிரயம் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 2 ஏற்படுவதற்கு முதல் நாள் வரை ஜாமின் என்று சொல்லப்பட்டது ஆனால் கிரய சாசனமாக எழுதப்பட்டது.

(இரு தரப்பினரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் , சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

Athemarachiys
20/8/25